# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு

**ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பிற்கான (யுனெஸ்கோ) தேசிய ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*கல்வி அமைச்சர் அவர்களால் 2024, பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, சனவரி மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *241 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 60.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ச.வ.- ஓ. 46/2008

**ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பிற்கான (யுனெஸ்கோ) தேசிய ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

முன்னுரை

கல்வி, அறிவியல்கள், பண்பாடு, தொடர்பாடல் மற்றும் தகவலினூடாகச் சமாதானப் பண்பாடொன்றைக் கட்டியெழுப்புதல், வறுமையை அடியோடு ஒழித்தல், நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் பண்பாடிடை உரையாடல் என்பவற்றுக்குப் பங்களிப்பதற்கான யுனெஸ்கோவின் தொலைநோக்கைக் கடைப்பிடித்து, (இதனகத்துப்பின்னர் [யுனெஸ்கோ] எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பின் உறுப்பாண்மையை இலங்கையானது 1949 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்டதாதலாலும்:

அத்துடன் இயைபான பகிரங்க, பகுதியளவில் அரசாங்க, தனியார் மற்றும் குடியியல் ஒழுங்கமைப்பு உட்பட, தேசிய அரசாங்கத்துக்கும் மற்றும் யுனெஸ்கோவுக்கும் இடையே இணைப்பு முகவராண்மைகளாகப் பணியாற்றுவதற்கு ஒரு தேசிய ஆணைக்குழுவாக அமைவதற்கும் யுனெஸ்கோவின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதிலும் யுனெஸ்கோ முன்னுரிமைகளை ஆதரிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் பங்களிப்பதற்கும் யுனெஸ்கோ அமைப்பு விதியின் உறுப்புரை VII ஒவ்வோர் உறுப்பினருக்கும் பணிப்பாணை விடுக்கின்றதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

## யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவைத் தாபித்தல்

*யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக் குழுவைத் தாபித்தல்*

**2.** (1) (இதனகத்துப்பின்னர், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமை யையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப் பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*ஆணைக் குழுவின் குறிக்கோள்கள்*

**3.** ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றுக்கான பொறுப்பைத் தனியாக அல் லது வேறு குழுக்களுடனான ஒத்தாசையுடன் ஏற்றல்:-

(i) இலங்கையில் எல்லா யுனெஸ்கோ நிதியளிக்கப் பட்ட அல்லது தொடர்புபட்ட செயற்பாடுகளைத் தொழிற்படுத்துவதற்காகவும்;

(ii) யுனெஸ்கோ நிறைவேற்றுச் சபையிலும் யுனெஸ்கோ பொது மாநாட்டிலும் எல்லா யுனெஸ்கோ தீர்மானங்களையும், வழிகாட்டுநெறிகளையும், சமவாயங்களையும் வேறு சாதனங்களையும் தொடக்கிவைப்பதற்காகவும், அவற்றுக்குக் கூட்டு ஆதரவளிப்பதற்காகவும், அவற்றைப் புறக்குறிப் பிடுவதற்காகவும்;

(iii) ஏதேனும் ஓரங்காட்டுதலின்றி இலங்கை மக்களுக்கு நன்மையை உறுதிப்படுத்தி, உபபிராந்திய, பிராந்திய மற்றும் சர்வதேச யுனெஸ்கோ செயற்பாடுகளில் இலங்கையின் முனைப்பான பங்குபற்றுகைக்காகவும்;

(iv) யுனெஸ்கோ பதிவகங்களுக்குப் பெயர்நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்காகவும்.

(ஆ) இலங்கையில் கிடைக்கக்கூடியனவான அறிவாற்றல், அறிவியல், கலைசார் அல்லது நிருவாக வளங்களையும் திறன்களையும் உறுதிப்படுத்தி இயைபான அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பகுதியளவில் அரசாங்க, அரசசார்பற்ற மற்றும் தனியார் முகவராண்மைகள், நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் புத்திஜீவிகளையும் இலங்கை மக்களையும் பயனுள்ளவகைகளில் யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்களுடனும் செயற்பாடுகளுடனும் இணைத்தல்;

(இ) யுனெஸ்கோ அமைப்புவிதியின் உறுப்புரை II இல் எதிர்நோக்கப்பட்டவாறு பின்வருவனவற்றுக்காக இலங்கைக்காகச் சர்வதேச ஒத்துழைப்பையும் பங்காண்மைகளையும் அபிவிருத்தி செய்தல்:-

(i) ஐக்கிய நாடுகள் குடும்பத்தின் ஒழுங்மைப்புகளினதும் வேறு சர்வதேச நிறுவனங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் உதவியுடன் பொறுப்பேற்கப்படுகின்றவையும் யுனெஸ்கோவிற்குப் பொறுப்பிக்கப்பட்டவையுமான செயற்பாடுகளைத் திட்மிடுவதிலும் நிறைவேற்றுவதிலும்;

(ii) யுனெஸ்கோவின் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் சர்வதேச, பிராந்திய மற்றும் உபபிராந்தியச் செயற்பாடுகளை நடாத்துவதன் மூலம் யுனெஸ்கோவுடன் இணைந்த குழுக்களுட

னும் வேறு சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் பரஸ்பரரீதியில் நன்மைபயக்கும் யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்கும்;

(ஈ) யுனெஸ்கோவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய நிகழ்ச்சித்திட்டங்களினூடாகக் கல்வி, அறிவியல், பண்பாடு, தொடர்பாடல் மற்றும் தகவலுடன் தொடர்புபட்ட துறைகளில் தகவற் பரிமாற்றத்தை வசதிப்படுத்துதலும் தொடர்புபட்ட துறைகளிலான தகவலுக்காக ஒரு தீர்வு மனையாகச் செயலாற்றுதலும் அத்துறைகளில் பொதுமக்களின் அக்கறையைத் தூண்டுவதற்கான தகவலைப் பரப்புதலும்;

(உ) ஏற்புறுதிக்காகவும் பின்தொடர் நடவடிக்கைக்காகவும் இயைபான அமைச்சுகளுக்கு யுனெஸ்கோ சமவாயங்களையும் வேறு சர்வதேசச் சாதனங்களையும் அறிமுகப் படுத்துதல்;

(ஊ) யுனெஸ்கோ முறைமையினூடாக இலங்கைக்குத் தொழினுட்ப உதவியையும் இலங்கையில் ஆற்றலைக் கட்டியெழுப்புவதனையும் வசதிப்படுத்துதல்; அத்துடன்

(எ) யுனெஸ்கோவின் முக்கியமான அத்திவாரத் தூண்களாகவுள்ள கல்வி, அறிவியல், பண்பாடு, தொடர்பாடல் மற்றும் தகவலினூடாக யுனெஸ்கோவின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் மூலம் சமாதானம், பாதுகாப்பு மற்றும் மாந்தரின் பொதுவான நல்வாழ்வு என்பவற்றைப் பேணுவதற்கான யுனெஸ்கோவின் தொலைநோக்குக்குப் பங்களித்தல்.

ஆணைக் குழுவின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**4**. ஆணைக்குழுவின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

(அ) எல்லா யுனெஸ்கோ முறைமைகளுடனும் செயற்பாடு களுடனும் சர்வதேச இணைப்பு, ஒருங்கிணைப்பு, கலந்தாலோசனைகள் மற்றும் பரிந்துரை என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நிலைநாட்டுதலும்;

(ஆ) யுனெஸ்கோ பொது மாநாடு, நிறைவேற்றுச் சபைக் கூட்டங்கள், உச்சி மாநாடுகள், மாநாடுகள் மற்றும் அரசாங்கங்களுக்கிடையேயான கூட்டங்கள் என்பவற்றில் இலங்கையினால் தோதான பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்துதலும் தெரிவிக்கப்பட்ட இடையீடுகளை வசதிப்படுத்துதலும்;

(இ) அக்கறைகொண்டுள்ளோருக்கு அறிவித்தலும், யுனெஸ்கோ சமவாயங்கள், தீர்மானங்கள் மற்றும் ஒத்த சாதனங்களை நடைமுறைப்படுத்துதலும் கண் காணித்தலும்;

(ஈ) இலங்கை அக்கறைகொண்டுள்ளோரின் ஒத்தாசையுடன் இலங்கையிலுள்ள யுனெஸ்கோவுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும், நிலையங்களையும், அமை விடங்களையும், நகரங்களையும், வலையமைப்புகளையும், கழகங்களையும், களரிகளையும், தவிசுகளையும் தொடக்கி வைத்தலும், நிதியளித்தலும், ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும், யுனெஸ்கோ முறைமையினூடாகத் தொழினுட்ப உதவியுடனும் ஆற்றலைக் கட்டியெழுப்பு தலுடனும் ஆதாரப்படுத்துதலும்;

(உ) ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஆதரிப்பதற்குக் குறிப்பிட்ட விசாரணைக்குரிய விடயங்களுடன் யுனெஸ்கோ தகுதித்துறைகளில் தேசியக் குழுக்களையும், தொழிற்படுத்தற் குழுக்களையும், தொழிற்பாட்டுக் குழுக்களையும், நிபுணர் குழுக்களையும் மற்றும் ஆலோசகர்களையும் நியமித்தலும் குழு உறுப்பினர் களுக்கான அல்லது ஆலோசகர்களுக்கான தோதான ஊதியம் பற்றி முடிபுசெய்தலும்;

(ஊ) இலங்கைக்கு இயைபானவாறு, யுனெஸ்கோவினால் வெளிப்படுத்தப்பட்ட நாட்களையும், ஆண்டுகளையும், பத்தாண்டுகளையும் அக்கறைகொண்டுள்ளோருடன் கொண்டாடுதல்;

(எ) யுனெஸ்கோ அளிப்புக்கள், ஆதார ஆசிரியர்கள், யுனெஸ்கோ தவிசுகள், கற்கை மானியக்கொடைகள் மற்றும் வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனபற்றிய தகவலைப் பரப்புதலும் அவற்றுக்கான தேர்வுவிழைநர்களை விதந்துரைத்தல்;

(ஏ) ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாக் கருமங்களும் தொடர்பான அறிக்கைகளையும், தகவல்களையும், தரவுகளையும் இலங்கையிலுள்ள அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்;

(ஐ) ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது, பதவிவிலக்குதலுட்பட, ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்;

(ஒ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அலுவலகங்கள், நூலகங்கள், கூடாரங்கள், மண்டபங்கள், கூட்ட மண்டபங்கள் மற்றும் மாநாட்டு மண்டபங்கள் அத்துடன் யுனெஸ்கோ பெயர்ப்பலகைகள் உட்பட, அத்தகைய கட்டிடங்களையும் ஞாபகார்த்தச் சின்னங்களையும் நிறுவுதலும் அல்லது வாடகைக் கெடுத்தலும், அவற்றுக்குச் சாதனமிடுதலும் அவற்றைப் பேணுதலும்;

(ஓ) ஆணைக்குழுவின் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதனையும் யுனெஸ்கோவின் செயற்பாடுகளில் அதன் பங்குபற்றுகையை அதிகரிப்பதனையும் இயலச்செய்வதற்கு நிதிசார் முகாமையில் போதிய அதிகாரத்தைப் பிரயோகித்தல்;

(ஔ) யுனெஸ்கோ பணிப்பாணைக்கு இயைபான செயற்பாடுகளை நடாத்தவதற்கு இயைபான அக்கறை கொண்டுள்ளோருக்கு அதிகாரமளித்தலும், அவர்களைச் சான்றுப்படுத்துதலும், அவர்களுக்கு அனுமதியளித்தலும்;

(க) செயலகத்தின் தொழிற்பாடுகளைப் பணிப்பதற்கும் வசதிப்படுத்துவதற்கும் தொழிற்பாட்டுக் கைந்நூல்கள், வழிகாட்டுநெறிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அங்கீகரித்தலும் வழங்குதலும்;

(ங) யுனெஸ்கோவின் குறிக்கோள்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஏதேனும் அம்சத்தின் மீது பொதுமக்களையும், தனியாட்களையும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் சென்றடைவதற்கு வெகுசன மற்றும் எண்ணிம ஊடகத்துக்குத் தகவலைப் பரப்புதல்;

(ச) யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்நாட்டு (அரசாங்க அல்லது தனியார்) நிதிகளை அல்லது வெளிநாட்டு நிதிகளைப் பெறுதலும் திரட்டுதலும்:

ஆயின், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, எல்லா வெளிநாட்டு நிதிகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ஞ) யுனெஸ்கோவுக்கும் யுனெஸ்கோவுடன் இணைந்த குழுக்களுக்கும் வருடாந்த மற்றும் வேறு உறுப்பாண்மை அல்லது ஒப்பப்பணக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்;

(ட) ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் புரிதலும் மற்றும் யுனெஸ்கோ அக்கறை கொண்டுள்ள கருமங்கள்மீது கூட்டு அல்லது தனிப்பட்ட கற்கைகளையும் ஆராய்ச்சிகளையும் கலந்தாராய்வுகளையும்ஆலோசனைகளையும்நடாத்துதலும்;

(ண) இயைபான நிதிசார் ஒழுங்குவிதிகள், ஆராய்ச்சி, தரவு சரிபார்த்தல் அல்லது ஆணைக்குழுவின் கடமைகளினதும் பணிகளினதும் சுமுகமானதும் வினைத்திறனானதுமான நிறைவேற்றுகைக்கு அவசியமான வேறெவையேனும் சேவைகள் அல்லது செயற்பாடுகள் என்பவற்றுக்கு இணங்கியொழுக, தோதான கொடுப்பனவுகளுக்காகப் பணத்தை வெளியிலிருந்து பெறுதல்;

(த) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவரேனுமாளினால் சேகரிக்கப்பட்ட ஆராய்ச்சி, ஏதேனும் பொருள் அல்லது தரவுகள் என்பன எல்லாவற்றினதும் சொத்தாண்மையைக் கொண்டிருத்தலும் அத்தகைய ஆராய்ச்சி, பொருள் அல்லது தரவுகளின் பாதுகாப்புக்காகப் பொறுப்பாக விருத்தலும்;

(ந) யுனெஸ்கோ செயற்பாடுகளை நிருவகித்தலும் ஒருங்கிணைத்தலும் யுனெஸ்கோ நிரற்படுத்தப்பட்ட தளங்களிலும் விடயங்களிலும் செயற்பாடுகளிலும் யுனெஸ்கோ அங்கீகாரம்பெற்ற குறியின் பாவனையை அனுமதித்தலும் அத்தகைய சேவைகளுக்காகக் கட்டணங்களை விதித்தலும்;

(ப) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடப்பு, சேமிப்பு மற்றும் வைப்பு அல்லது நிலையான கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் ஆணைக்குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதவாறான அத்தகைய நிதிகளை அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடுசெய்தலும்;

(ம) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத் துக்காக, காசாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக வாயினுஞ்சரி, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கொடைகளை, உதவுதொகைகளை, மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல்:

ஆயின், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடு களில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு வானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத் திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ய) இலங்கையிலுள்ள யுனெஸ்கோ மரபுரிமைத் தளங்க ளுக்கும் உயிரிக்கோள ஒதுக்குகளுக்கும் வேறு யுனெஸ்கோ தளங்களுக்குமான ஒவ்வொரு வருகையாளர்மீதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நிர்ணயிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் கணக்கிடப்பட்ட அறவீடொன்றை விதித்தல்;

(ர) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத் துக்காக, ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும், குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல் அல்லது வாடகைக்கு விடுதல், அடைமானம் வைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்; அத்துடன்

(ல) ஆணைக்குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறை வேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் புரிதலும்.

ஆணைக்குழுவை அமைத்துருவாக்குதல்

**5.** ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர்;

(ii) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;

(iii) திறைசேரிச் செயலாளர் அல்லது திறைசேரிப் பிரதிச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(iv) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;

(v) வாழ்க்கைத்தொழிற் பயிற்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(vi) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(vii) அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(viii) சமுத்திரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(ix) சூழல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(x) பண்பாடு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(xi) ஆவணமுறையான மரபுரிமை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(xii) வெகுசன ஊடகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(xiii) சமூகசேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது நியமத்தர்;

(xiv) யுனெஸ்கோவிற்கான இலங்கைத் தேசிய ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம்;

(xv) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆறு தேசியக் குழுக்களின் ஆறு தவிசாளர்கள்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்). கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், பண்பாடு மற்றும் தொடர்பாடல் அத்துடன் தகவல் ஆகிய துறைகளில் தேர்ச்சிபெற்றவரான ஆட்களுக்கிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்கள்.

*ஆணைக் குழுவின் தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர்*

**6.** (1) அமைச்சர் ஆணைக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஆணைக்குழுவின் துணைத் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(3) தவிசாளரும் துணைத் தவிசாளரும், எந்தப் பதவியின் பயனைக்கொண்டு அவர்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனரோ அந்தப் பதவியை அவர்கள் வகிக்கும் வரை, ஆணைக் குழுவில் பதவிவகித்தல் வேண்டும்.

(4) தவிசாளர் சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தமது பதவிக்குரிய தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு புரிவதற்கு மற்றும்

நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, துணைத் தவிசாளர், துணைத் தவிசாளராக அவரது கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராக செயலாற்றலாம்.

*ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப் படுவதற்கான அல்லது தொடர்ந்து இருப்பதற்கான தகைமை யீனங்கள்*

**7**. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு, பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு தகமையற்றவராதல் வேண்டும்–

(அ) அவர் பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராகவிருப்பின் அல்லது வரின்;

(ஆ) அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரசையாக இல்லாதொழியின்;

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டி லுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுக்கப்படாத கடனிறுக்கவகையற்றவரான அல்லது வங்கிமுறிந்தவரான ஆளொருவராக, இருப்பின்;

(ஈ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவர் எனக் காணப்படின் அல்லது வெளிப்படுத் தப்படின்;

(உ) அவர் இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண்ட னைத்தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்;

(ஊ) அவர் ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது துய்ப்பின்;

(எ) அவர் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கும் சாத்தியமுள்ளதான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருப்பின்; அல்லது

(ஏ) அவர் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருப்பின்.

*ஆணைக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலங்கள்*

**8**. ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவிவிலகுகை அல்லது அகற்றுகை மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறுவகையானதாயினுஞ்சரி, மேற்கொண்ட தவணையொன்றுக்கு மேற்படாமல் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் அகற்றுகை, பதவி விலகுகை முதலியன*

**9**. (1) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்நேரத்திலும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது, அமைச்சரினால் அப்பதவி விலகுகை எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கோ அல்லது வேறேதேனும் தன்மையில் ஆணைக்குழுவிற்குச் சேவையாற்றுவதற்கோ தகவுடையவராதலாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர் 5(ஆ) என்னும்

பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், அமைச்சர் 5(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் வராமைபற்றித் தவிசாளருக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் 5(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

ஆணைக் குழுவின் பொதுமாநாடு

**10**. ஆணைக்குழுவின் பின்வரும் கருமங்களைக் கலந்தாராய்வதற்கும் தீர்த்துவைப்பதற்கும் ஆணைக்குழு பொது மாநாட்டை ஒவ்வோராண்டும் நடாத்துதல் வேண்டும்:-

(அ) யுனெஸ்கோ சமவாயங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பாரிய உந்துதல்களுக்கு ஆதரவளித்தல், கையொப்பமிடுதல், அவற்றை ஏற்புறுதிசெய்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் உட்பட யுனெஸ்கோவுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்பற்றி அரசாங்கத்துக்கு விதந்துரைத்தல்;

(ஆ) யுனெஸ்கோவின் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கிசைய தேசிய ஆணைக்குழுவின் மூலோபாயஞ்சார் திட்டத்தை விதந்துரைத்தலும் அங்கீகரித்தலும்;

(இ) செயலகத்தின் செயற்பாடுகளையும் வரவுசெலவுத் திட்டங்களையும் விதந்துரைத்தலும் அங்கீகரித்தலும் தேசிய ஆணைக்குழுவின் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தையும் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தையும் அங்கீகரித்தலும்;

(ஈ) வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் அறிக்கைக்கான பதிலிறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(உ) தேசிய ஆணைக்குழுவின் செயல்நிறைவேற்றத்தைக் கண்காணித்தலும் மதிப்பீடுசெய்தலும் செயலகத்தின் பணியாட்டொகுதியினருக்கான ஊக்குவிப்புக்களை விதந்துரைத்தலும் அங்கீகரித்தலும்;

(ஊ) அவசியமெனக் கருதப்படுகின்றவாறு தேசிய ஆணைக் குழுவின் செயலாளர் நாயகத்துக்குத் தத்துவங்களைக் கையளித்தல்; அத்துடன்

(எ) செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட கற்கை மற்றும் கலந்தாலோசனைசார் அறிக்கைகளின்மீது விதப்புரைகளைச் செய்தல்.

*ஆணைக் குழுவின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்*

**11.** (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் பன்னிரெண்டு உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டமும் தவிசாளரினால் தலைமைதாங்கப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், ஆணைக்குழுவின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்று-

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றாகக் கூடுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எண்ணிக்கையினரான உறுப்பினர்களினாலும்; அல்லது

(ஆ) கூட்டத்தில் பங்குபற்றுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின் காலநீட்சியின்போது அதன்மூலம் ஒவ்வொரு பங்குபற்றுகின்ற உறுப்பினரையும் உடனிகழ்கின்றமுறையில் காணமுடியுமானவர்களாகவும் கேட்கமுடியுமானவர்களாகவும் இருக்கின்ற கட்புல-செவிப்புலத் தொடர்பாடலின்மூலமும்; அல்லது

(இ) (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டினதும் இணைப்பின் மூலம்

நடாத்தப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரினது வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அவரது வாக்குடன்சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது ஒவ்வோர் ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையாவது கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும், விசேட அல்லது அதிவிசேட பொதுக் கூட்டங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரினால் தேவைப்படுத்தப்படினும் மற்றும் தேவைப் படுத்தப்படும் போதும் கூட்டப்படலாம்.

ஆணைக் குழுவின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படு தலாகாது

**12.** ஆணைக்குழுவானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் ஆணைக் குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர் களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக விருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதெனக் கருதப் படுதலோ ஆகாது.

ஆணைக் குழுவின் உறுப்பினர் களின் ஊதியம்

**13.** நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் இலச்சினை

**14.** (1) ஆணைக்குழுவின் இலச்சினையானது-

(அ) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(இ) ஆணைக்குழுவின் வலுவளிப்புடனும் ஆணைக் குழுவின் இரு உறுப்பினர்களினது முன்னிலையிலும் தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுக மாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாத னத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர் களை எழுதிக் கையொப்பமிடுதல் வேணடும்.

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

தேசிய குழுக்களைத் தாபித்தல்

**15.** (1) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின்மூலம் அதற்கு அளிக்கப்பட்டுள்ள, குறித்தளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு உதவுகின்றவாறு அவசியமான அல்லது உசிதமானதெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினவான தேசியக் குழுக்கள், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களைச் செயலாளர் நாயகத்தின் விதப்புரையின்மீது கலந்தாலோசனையுடன் ஆணைக்குழு நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேசியக் குழுக்கள்–

(அ) கல்வி மீதான யுனெஸ்கோ தேசியக் குழு;

(ஆ) இயற்கை அறிவியல் மீதான யுனெஸ்கோ தேசியக் குழு;

(இ) சமூக மற்றும் மனித அறிவியல் மீதான யுனெஸ்கோ தேசியக் குழு;

(ஈ) பண்பாடு மீதான யுனெஸ்கோ தேசியக் குழு;

(உ) தொடர்பாடல் மற்றும் தகவல்மீதான யுனெஸ்கோ தேசியக் குழு; அத்துடன்

(ஊ) (யுனெஸ்கோவின் பணிப்பாணைக்குள்) அடங்குகின்ற யுனெஸ்கோ துறையிடைத் தேசியக் குழு.

(3) ஒவ்வொரு தேசியக் குழுவுக்கும் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்தின் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு தவிசாளர் அல்லது கூட்டு தவிசாளர்கள் இருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேசிய குழுக்களின் உறுப்பினர்கள் அத்தகைய இயைபான குழுக்களின் விசாரணைக்குரிய விடயங்களைப் பயனுற விளிப்பதற்குக் குறிப்பிட்டவொருதுறையில் அத்தகைய தகைமைகளையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) தேசியக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பு, பதவி விலகுகை அல்லது அகற்றுகையின்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக வாயினுஞ்சரி, ஒன்றுக்கு மேற்படாத மேற்கொண்டவொரு தவணைக்கு மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(6) தேசிய குழுவின் எவரேனும் உறுப்பினர், இறப்பு, பதவி விலகுகை அல்லது அகற்றப்படுகைமூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், ஆணைக்குழுவானது, செயலாளர் நாயகத்தின் விதப்புரையின்மீது அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(7) ஒரு தேசியக் குழுவின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின் அல்லது மூன்றுமாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், ஆணைக்குழு செயலாளர் நாயகத்தின் விதப்புரையின்பேரில், அவர் இல்லாதிருக்கும்போது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(8) ஒரு தேசியக் குழுவின் எவரேனும் உறுப்பினர், ஆணைக் குழுவுக்கு முன்கூட்டியே அவரது இல்லாமை பற்றி அறிவிக்காமல் தேசியக் குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு செயலாளர் நாயகத்தின் விதப்புரையின்மீது அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

(9) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு தேசியக் குழுவினதும் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறாக, குறித்தளிக்கப்பட்ட கடமைகளுள் எவற்றையும் நிறைவேற்றுவது சம்பந்தமாக உறப்பட்ட அத்தகைய படிகள் செலுத்தப்படுதலும் எவையேனும் செலவுகள் மீளளிக்கப்படுதலும் வேண்டும்.

தேசியக் குழுக்களின் கடமைகள் மற்றும் பணிகள்

**16**. பதினைந்தாம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியக் குழுக்களின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பயனுற நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தலும் ஆதரவளித்தலும், யுனெஸ்கோவின் தகுதித்துறைகள் தொடர்பான ஏதேனும் பிரச்சினையை விளித்தலும்;

(ஆ) யுனெஸ்கோ பொது மாநாட்டுக்கும் நிறைவேற்றுச் சபைக்கும் முன்வைக்கப்பட்ட சர்வதேச யுனெஸ்கோ உந்துதல்கள், சமவாயங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விடயங்கள் என்பவற்றின் தேசியக் கொள்கை, நிலைமை மற்றும் நடைமுறைப்படுத்துகை மீது ஆய்தலும், கலந்தாராய்தலும், தீர்மானித்தலும், விதப்புரைகளைச் செய்தலும்;

(இ) இயைபான துறைகளில் ஆணைக்குழுவின் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும், யுனெஸ்கோவின் மூலோபாயஞ்சார் துறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆவணங்களினால் வழிகாட்டப்படுவதன்மூலம் செயலாளர் நாயகத்துக்கு உதவுதல்;

(ஈ) ஒரு தேசியக் குழுவினால் மேவப்பட்ட ஒவ்வொரு விசேடித்த துறையினதும் வருடாந்த நடவடிக்கைத் திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டம் பற்றிய விதப்புரைகளைச் செய்தல்; அத்துடன்

(உ) செயலாளர் நாயகத்தின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவினால் முடிபுசெய்யப்படக்கூடிய வாறாக யுனெஸ்கோ செயற்பாடுகளுக்கு ஆதரவான வேறேதேனும் செயற்பாட்டைச் செய்தல்.

*நிமித்தக் குழுக்களை நியமித்தல்*

**17.** ஆணைக்குழு, காலத்துக்குக்காலம், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன், ஆணைக்குழுவின் அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பாண்மைகளை அல்லது வேறாட்களை அல்லது இரண்டையும் கொண்டுள்ளதும் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கானதுமான நிமித்தக் குழுக்களைக் காலத்துக்குக் காலம் நியமிக்கலாம்.

## பாகம் II

## ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் செயலகத்தைத் தாபித்தலும் பணியாட்டொகுதியினரை நியமித்தலும்

*ஆணைக் குழுவின் செயலகத்தைத் தாபித்தல்*

**18.** (1) தனியாகவோ அல்லது ஏனைய குழுக்களின் ஒத்தாசையுடனோ, ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளையும், பணிப்புரைகளையும், தொழிற்பாடுகளையும், நிதிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும், இச்சட்டம் தொடர்பான எல்லாச் செயற்பாடுகளையும் தொடக்கிவைப்பதற்கும், அவற்றுக்கு ஆதரவளிப்பதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், முகாமைசெய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மதிப்பீடுசெய்வதற்குமான பொறுப்பை ஏற்பதற்கு (இதனகத்துப்பின்னர் “செயலகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) செயலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது எழுத்திலும் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் 19 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்துக்கு 4 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கையளிக்

கலாமென்பதுடன் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் ஆணைக் குழுவின் பெயரிலும் அதன்சார்பிலும் அத்தகைய தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப் பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைத் தானாகவே பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் கையளிப்பை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

ஆணைக் குழுவின் செயலாளர் நாயகத்தை நியமித்தல்

**19**. (1) அமைச்சர், கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், பண்பாடு, தொடர்பாடல் மற்றும் தகவல் அல்லது சர்வதேசதொடர்புகள் என்ற துறைகளில் இருபது வருடங்களுக்குக் குறையாத கல்விசார் அல்லது உயர்தொழில்சார் அனுபவமுள்ள வரான ஆள் ஒருவரை (இச்சட்டத்தில் “செயலாளர் நாயகம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமாக நியமித்தல் வேண்டும்.

(2) செயலாளர் நாயகம் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவுட்பட, செயலகத்தினூடாக, ஆணைக்குழுவின் சார்பில் எல்லாத் தொழிற் பாடுகளையும் அலுவல்களையும் திட்டமிடுவதற்கும், நிறைவேற்று வதற்கும், முகாமைசெய்வதற்கும், கண்காணிப்பதற்கும் பொறுப் பாகவிருத்தலும் வேண்டும்:-

(அ) செயலகத்தின் ஒட்டுமொத்தக் கட்டமைப்புக்கும் தொழிற்பாடுகளுக்குமான ஒரு மூலோபாயஞ்சார் நோக்கெல்லையையும் பணிப்புக்களையும் வழங்கு தல்;

(ஆ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக ஊழியர்கோப்புப் பதவிகளுக்குப் பணியாட்டொகு தியை ஆட்சேர்த்தலும் முகாமைசெய்தலும்;

(இ) செயலகத்தின் செயற்பாடுகள் மற்றும் குறித்தளிப்புக் களுக்கு ஆதரவளிப்பதற்கு குறிப்பிட்ட விசாரணைக் குரிய விடயங்களுடன் யுனெஸ்கோ தகுதித்துறை களில், அத்தகைய தேசியக் குழுக்களையும், நிமித்தக் குழுக்களையும், நிபுணர்களையும், ஆலோசகர்களை யும் நியமித்தலும் குழு உறுப்பினர்கள், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கான தோதான ஊதியம் பற்றி ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(ஈ) ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள், நிருவாக மற்றும் நிதிசார் முகாமை;

(உ) 1999 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்தை நிருவகித் தல்;

(ஊ) யுனெஸ்கோவின் நிகழ்ச்சித்திட்டங்களுடனும் செயற்பாடுகளுடனும் குறித்தளிக்கப்பட்ட, ஆணைக் குழுவின் வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டத் துக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டத்துக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட வருடாந்த நடவடிக்கைத்திட்டத்தையும் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தையும் சமர்ப்பித்தல்;

(எ) ஆணைக்குழுவினதும் செயலகத்தினதும் சுமுகமான பணியாற்றுகைக்காகக் காலத்துக்குக்காலம் நட வடிக்கைமுறைகள் பற்றிய கைந்நூலையும் அவசிய மான மீளாய்வுகளையும் தயாரித்தல்;

(ஏ) ஆணைக்குழுவின் நிதியத்தை முகாமைசெய்தல்; அத்துடன்

(ஐ) ஆணைக்குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்.

(3) செயலாளர் நாயகம் ஆணைக்குழுவின் அல்லது இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகம்-

(அ) செயலாளர் நாயகத்தின் பணிகளுள் எவற்றையும், பொறுப்புக்களின் சுமுகமான நிறைவேற்றுகைக்குத் தோதானதாகக் கருதப்படுகின்றவாறாக பிரதிச் செயலாளர் நாயகத்துக்கு அல்லது செயலகத்தின் வேறெவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்;

(ஆ) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள், தத்துவங்கள், உரிமங்கள் மற்றும் அதிகாரங்களைக் கொள்ளலாம் மற்றும் அவற்றுக்கு அதிகாரமளிக்கலாம்;

(இ) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், ஒத்தாசைசார் செயற்பாடுகளுக்காகவும் தொழினுட்ப ஆளணியினரின் பரிமாற்றுகைக்காகவும் யுனெஸ்கோ மற்றும் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை முழுமையாக அல்லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களையுடைய இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி உள்ள நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்;

(ஈ) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் முறையான குழுக்களின் கலந்தாலோசனையுடனும், யுனெஸ்கோ கூட்டங்களுக்கு வருகைதருவதற்குப் பொருத்தமான நிபுணர்களைப் பெயர்குறித்துநியமிக்கலாம், அவர்களுக்கு ஆதரவளிக்கலாம் மற்றும் நிதியளிக்கலாம்; அத்துடன்

(உ) யுனெஸ்கோ முன்னுரிமைகளுக்கு இயைபான விடயங்கள்மீது அறிக்கைகள், பருவவிதழ்கள், புத்தகங்கள் மற்றும் பத்திரங்களைச் சேகரிக்கலாம், அச்சிடலாம் மற்றும் வெளியிடலாம்.

(5) செயலாளர் நாயகத்திற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் அளிக்கப்படலாம்.

ஆணைக்குழுவின் பிரதிச் செயலாளர் நாயகத்தை நியமித்தல்

**20.** (1) (இச்சட்டத்தில் "பிரதிச் செயலாளர் நாயகம்" ஒருவரெனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆணைக்குழுவின் பிரதிச் செயலாளர் நாயகமாக, அமைச்சர், கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், பண்பாடு, தொடர்பாடல், நிருவாகம் அல்லது நிதி என்ற துறைகளில் பதினைந்தாண்டு கல்விசார் அல்லது உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருக்கவேண்டிய ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) பிரதிச் செயலாளர் நாயகம், ஆணைக்குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் செயலாளர் நாயகத்துக்கு உதவுதல் வேண்டுமென்பதுடன் செயலாளர் நாயகத்தினால் குறித்தளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பிரதிச் செயலாளர் நாயகம், ஆணைக்குழுவின் யுனெஸ்கோ பொது மாநாட்டுக்கான செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(4) பிரதிச் செயலாளர் நாயகத்துக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

செயலாளர் நாயகம் மற்றும் பிரதிச் செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம்

**21.** (1) செயலாளர் தலைமையதிபதியும் மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் நான்காண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி ஒன்றுக்கு மேற்படாத மேற்கொண்ட பதவிக்காலத்துக்கு மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக செயலாளர் தலைமையதிபதியை அல்லது பிரதிச் செயலாளர் நாயகத்தை, விடயத்துக்கேற்ப, செயலாளர் நாயகத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட எவையேனும் சார்த்துதல்களைக் கவனத்துட் கொண்ட பின்னரும் அவற்றுக்குப் பதிலிறுப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளித்தபின்னரும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) செயலாளர் நாயகம் மற்றும் பிரதிச் செயலாளர் தலைமை யதிபதியின் பதவியானது, இறப்பு, பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத் தினாலான பதவிவிலகல்மூலம் வறிதாதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகத்தின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அத்தகைய பதவிக்கு நியமனமொன்று செய்யப்படும் வரை, செயலாளர் நாயகத்தின் கடமைகளைப் புரிவதற்கு, அமைச்சர் பிரதிச் செயலாளர் நாயகத்தை நியமிக்கலாம்.

ஆணைக் குழுவின் பணியாட் டொகுதி

**22.** (1) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளை வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்று வதற்கும் அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கை யினரான அலுவலர்களையும் ஊழியர்களையும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் நியமிக்கலாம்; மற்றும்

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில், அத்தகைய அலுவலர் கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து விலகலா மென்பதுடன் அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதி நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்; மற்றும்

(3) ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையின்பேரில் அத்தகைய முறை யிலும் அத்தகைய விதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவைக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனை களுக்கும் அவர்கள் அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அரசாங்க சேவைக்கு வெளியிலிருந்து ஆட்சேர்க்கப்படக்கூடியவர்களான ஆணைக்குழுவின் அலுவலர் களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காக சகாய நிதியத் திட்டங்களைத் தாபிக்கலாம் மற்றும் ஒழுங்குபடுத்தலாம் என்பது டன் அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்தலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட் தொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் பணியாட் தொகுதியின் போது எவரேனும் உறுப்பினராக அதே ஒழுக்காற்று கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்*

**23.** (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் மற்றும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரின் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழு வினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் அதேபோன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாகக் குறித்தளிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழு வின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாகக் குறித்தளிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண் டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழு வின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*உயர் கல்வி நிறுவனங்களி லிருந்தான அலுவலர்களை ஆணைக் குழுவுக்கு நியமித்தல்*

**24.** (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அவ்வலுவலரினதும் அல்லது ஊழியரினதும், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அத்தகைய நியமனமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு காலப்பகுதிக்காக இருத்தல் வேண்டும் அல்லது ஆணைக்குழுவினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்மீது, அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் III

### *நிதி*

*ஆணைக் குழுவின் மூலதனம்*

**25.** ஆணைக்குழுவின் ஆரம்ப மூலதனம்-

(அ) தீர்மானத்தின்மூலம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒதுக்கீட்டுச் சட்டத்தின்மூலம் அல்லது பாராளுமன் றத்தின் ஏதேனும் தீர்மானத்தின்மூலம் அதிகாரமளிக் கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளால் அதிகரிக்கப்படலாம்.

**26.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் நிதியம்*

(2) ஆணைக்குழுவின் நிதியம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலிருந்தோ எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்தான முதலீடுகள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்பவற்றின் மீதான வட்டி என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது, அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையினுள்ளான ஏதேனும் மூலத்திலிருந்து பெறப்பட்ட கடன்கள், நன்கொடைகள், கொடைகள், மரணசாதனக் கொடைகள் மற்றும் மானியக்கொடைகள் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து வருமானமாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) கட்டணங்களாகவும் உதவுதொகைகளாகவும் அறவிடப்பட்ட அத்தகைய எல்லாப் பணங்களும்.

*(3)* பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*ஆணைக்குழுவின் பணங்களை முதலீடு செய்தல்*

**27.** ஆணைக்குழுவுக்குரிய எவையேனும் பணங்கள், அமைச்சரினால் விடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுக்கமைய, தோதானதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடுசெய்யப்படலாம்.

*ஆணைக்குழுவின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

**28.** *(1)* ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*(2)* ஆணைக்குழுவின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை ஆணைக்குழுவானது செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பானதாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

## பாகம் VI

## **பொது**

*அமைச்சரின் பணிப்புக்கள்*

**29.** (1) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் பற்றி அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களைக் காலத்துக்குக்காலம் எழுத்தில் ஆணைக்குழுவிற்கு விடுக்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புக்களுடன் இணங்கியொழுகுவது ஆணைக்குழுவின் கடமையாதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் காலத்துக்குக்காலம், ஆணைக்குழுவின் அல்லது செயலகத்தின் செயற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் நுண்ணாய்வுசெய்யப்பட்டு அவற்றின்மீது அறிக்கையிடப்படுவதற்குக் கட்டளையிடலாம், அத்துடன் அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதன்மேல், ஆணைக் குழுவானது மற்றும் செயலகமானது அத்தகைய கட்டளையை பயனுறுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அளித்தலும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

*ஆணைக்குழு அறிக்கை பாராளுமன்றத் திற்கு முன்னர் சமர்ப்பிக்கப் படுதல்*

**30.** ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஆறு மாதகாலத்திற்குள், அவ்வாண்டின் போது அதன் செயற்பாடுகள் பற்றிய முழு விபரங்களையும் கொடுக்கின்ற ஓர் அறிக்கையை சமர்ப்பிக்கும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவர் அத்தகைய அறிக்கை எந்த ஆண்டுடன் தொடர்புடையதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் முடிவுக்குமுன்னர் அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தில் இடப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப் படுதல்*

***31.*** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் அலுவலர்களும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்*

***32.*** இரண்டாயிரத்து இருபத்திமூன்றாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் "இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள்" என்ற தலைப்பின்கீழ் பாகம் III இன் அத்தியாயம் I இன் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையற் பாலனவாகுமெனக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புக் களின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைக் கான பாதுகாப்பு*

***33.*** (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவிற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆளொருவரினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப் படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால் அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப் பட்டாலொழிய ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

விதிகள்

**34.** (1) ஆணைக்குழுவானது பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்கலாம்:-

(அ) பல்வேறு அலுவலர்களை நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(ஆ) ஆணைக்குழுவின் கூட்டங்களை, வருடாந்தப் பொதுக்கூட்டத்தை மற்றும் அதிவிசேட கூட்டங்களை அழைப்பதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) ஆணைக்குழுவின் அலுவல்களினது நிருவாகமும் முகாமையும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தின்முன்னர் அதன் கவனத்துக்காகக் கொரணப் படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**35.** (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதிலிருந்து மூன்றுமாதங் களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப் பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி உட்பிரிவு (3) இன்கீழ் எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**36.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய- பொருள் கோடல்

"நிபுணர்" என்பது, யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்களின் துறைகளுள் ஏதேனும் ஒன்றில் விசேடித்த தகுதியுடைய ஓர் உயர்தொழிலர் எனப் பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் கல்வி என்னும் விடயம் குறித் தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனப் பொருளாகும்;

"யுனெஸ்கோ" என்பது, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பு எனப் பொருளாகும்;

"யுனெஸ்கோ முறைமை" என்பது, யுனெஸ்கோ தலைமை யலுவலகங்கள், பிராந்திய அலுவலகங்கள், வெளிக்கள அலுவலகங்கள், தேசிய அலுவலகங்கள், இணைப்பு அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள், வலையமைப்புக்கள், வகுதி 01 மற்றும் வகுதி 02 நிலையங்கள், யுனெஸ்கோ மரபுரிமைத் தளங்கள், உயிரிக்கோள ஒதுக்குகள், யுனெஸ்கோ நகரங்களும் மற்றும் யுனெஸ்கோ களரிகள், கழகங்கள் மற்றும் தவிசுகள் அத்துடன் யுனெஸ்கோ

தீர்மானங்களின் மூலம் முறைமைக்கான வேறெவையேனும் சேர்த்தல்கள் எனப் பொருளாகும்;

“யுனெஸ்கோ செயற்பாடுகள்” என்பது, யுனெஸ்கோ முறைமையினால் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் வேறெல்லாச் செயற்பாடுகளும் எனப் பொருளாகும்;

“ஆணைக்குழுவின் அக்கறைகொண்டுள்ளோர்” என்பது, இலங்கையில் யுனெஸ்கோ தகுதித்துறைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள், பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், நியதிச்சட்டமுறையான அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், கழகங்கள், சர்வதேச ஒழுங்கமைப்புகள், தனியாட்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பொருளாகும்;

“யுனெஸ்கோ தகுதித்துறைகள்” என்பது, கல்விசார், அறிவியல், மற்றும் பண்பாட்டு, சமூக மற்றும் மனித அறிவியல்சார் அத்துடன் தொடர்பாடல் மற்றும் தகவல் துறைகள் எனப் பொருளாகும்;

“யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்கள்” என்பது, யுனெஸ்கோவின் தகுதித்துறைகள் எனப் பொருளாகுமென்பதுடன் கல்வி, இயற்கை அறிவியல்கள், சமூக மற்றும் மனித அறிவியல்கள், பண்பாடு மற்றும் தொடர்பாடலும் தகவலும் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

**37.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*